| English | Tamil |
| --- | --- |
| **Travelling out of the ACT** | ***ACT க்கு வெளியே பயணம் செய்தல்*** |
| ACT residents who are thinking about travelling outside the ACT should stay up to date with current COVID-19 situation. Travel advice and rules can vary from state to state.<br><br>The rules around crossing State and Territory borders by road, rail or air travel can change very quickly as we learn to live with the COVID-19 pandemic. | *ACT க்கு வெளியே பயணம் செய்ய நினைக்கும் ACT குடியிருப்பாளர்கள், தற்போதைய COVID-19 நிலைமை குறித்த பிந்திய தகவல்களை அறிந்தவர்களாக இருக்க வேண்டும். பயண ஆலோசனைகளும் விதிகளும் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும்.*<br><br>*COVID-19 தொற்றுநோய் பரவலுடன் நாம் சேர்ந்து வாழக் கற்றுக்கொண்டிருப்பதால், சாலை, ரயில் அல்லது விமானப் பயணம் மூலம் மாநில மற்றும் பிராந்திய எல்லைகளை கடப்பதற்கான விதிகள் மிக விரைவாக மாறக்கூடும்.* |
| Travelling interstate | *வேறுமாநிலங்களுக்கு பயணம் செய்தல்* |
| You should not travel if you are unwell. | *உங்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டிருந்தால் நீங்கள் பயணம் செய்யக்கூடாது.* |
| If you choose to travel, it is your responsibility to maintain physical distancing and practise good hygiene. | *நீங்கள் பயணம்செய்யத் தீர்மானித்தால், சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பது மற்றும் நல்ல சுகாதாரத்தைப் பேணுவது உங்கள் பொறுப்பாகும்.* |
| The ACT will endeavour to provide you with the latest interstate travel information. This can be found at www.covid19.act.gov.au and then search for 'travel advice'. | *மாநிலங்களுக்கிடையிலான பயணம் தொடர்பிலான பிந்திய தகவல்களை உங்களுக்கு வழங்க ACT முயற்சிக்கும். இது பற்றி அறிந்துகொள்ள www.covid19.act.gov.au-க்குச் சென்று 'travel advice' என்பதைத் தேடுங்கள்.* |

| | |
|---|---|
| We also encourage you to look up the latest information on travel restrictions for the state or territory you are planning to visit and follow those rules. The relevant websites for other states and territories are as follows:<br>NSW - www.nsw.gov.au/covid-19<br>Victoria - www.dhhs.vic.gov.au/coronavirus<br>Tasmania – www.coronavirus.tas.gov.au<br>South Australia - www.covid-19.sa.gov.au<br>Western Australia - www.wa.gov.au/government/covid-19-coronavirus<br>Northern Territory – www.coronavirus.nt.gov.au<br>Queensland - www.covid19.qld.gov.au<br><br>These websites might provide translated information or may require you to use Google Translate. | *நீங்கள் செல்வதற்குத் திட்டமிட்டுள்ள மாநிலம் அல்லது பிராந்தியத்திற்கான பயணக் கட்டுப்பாடுகள் குறித்த சமீபத்திய தகவல்களைப் பார்வையிடுமாறும், அந்த விதிகளைப் பின்பற்றுமாறும் நாம் உங்களை ஊக்குவிக்கிறோம்.<br>பிற மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கான வலைத்தளங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:<br>நியூ சவுத் வேல்ஸ் - www.nsw.gov.au/covid-19<br>விக்டோரியா - www.dhhs.vic.gov.au/coronavirus<br>டஸ்மேனியா – www.coronavirus.tas.gov.au<br>தெற்கு ஆஸ்திரேலியா - www.covid-19.sa.gov.au<br>மேற்கு ஆஸ்திரேலியா - www.wa.gov.au/government/covid-19-coronavirus<br>Northern Territory – www.coronavirus.nt.gov.au<br>குயின்ஸ்லாந்து - www.covid19.qld.gov.au<br><br>இந்த வலைத்தளங்களில் மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் கிடைக்கக்கூடும். அல்லது நீங்கள் Google மொழிபெயர்ப்பைப் பயன்படுத்த வேண்டியிருக்கலாம்.* |
| **Returning to the ACT** | ***ACT க்குத் திரும்புதல்*** |
| Travelling through other states and territories to get home | *மற்ற மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்கள் வழியாக பயணம் செய்து வீடு திரும்புதல்* |
| Depending upon what form of transport you are using, you might have to travel back to Canberra via another state or territory (e.g. if you are driving, you must return through NSW).<br><br>If you are travelling through a state to territory to get home (including an airport), check what restrictions apply in that state or territory. | *நீங்கள் எந்த வகையான போக்குவரத்தைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்து, வேறு மாநிலம் அல்லது பிராந்தியம் வழியாக கன்பராவுக்கு திரும்பி வர வேண்டியிருக்கலாம் (உதாரணமாக உங்களது வாகனத்தில் பயணம் செய்தீர்கள் என்றால், நீங்கள் NSW வழியாக திரும்ப வேண்டும்).<br><br>நீங்கள் ஒரு மாநிலம் அல்லது பிராந்தியத்தின் வழியாக பயணித்து வீடு திரும்புகிறீர்கள் என்றால்(விமான நிலையம் உட்பட), அந்த மாநிலம் அல்லது பிராந்தியத்திற்கு என்ன கட்டுப்பாடுகள் பொருந்தும் என்பதைச் சரிபார்க்கவும்.* |

| Border closures | எல்லை மூடல்கள் |
|---|---|
| During the response to the COVID-19 pandemic, states and territories have sometimes closed their borders to people who live in other states and territories.<br><br>In some cases, this has happened very suddenly and has left people stranded and unable to get home.<br><br>If this happens to you, you need to contact ACT Health via the COVID-19 Helpline on (02) 6207 7244. | *COVID-19* தொற்று நோய்க்கு எதிரான நடவடிக்கையின்போது, மாநிலங்களும் பிராந்தியங்களும் சிலவேளைகளில் மற்ற மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களில் வாழும் மக்களுக்கு தங்கள் எல்லைகளை மூடிவிட்டன.<br><br>சில சந்தர்ப்பங்களில், இந்நடவடிக்கை திடீரென்று மேற்கொள்ளப்பட்டதால், பலர் வீடு திரும்பமுடியாமல் நிர்க்கதியான நிலைக்கு உள்ளாக நேர்ந்தது.<br><br>இந்நிலை உங்களுக்கும் நேர்ந்திருந்தால், நீங்கள் *(02) 6207 7244* இல் *COVID-19* ஹெல்ப்லைன் வழியாக *ACT Health*-ஐ தொடர்பு கொள்ள வேண்டும். |
| What will happen when I return to the ACT? | நான் *ACT* க்குத் திரும்பும்போது என்ன நடக்கும்? |
| Depending upon when and where you have travelled, you might be required to report to ACT Health authorities and to quarantine for 14 days upon your return to the ACT.<br><br>To find out if this applies to you, please go to the www.covid19.act.gov.au and search for 'quarantine for people returning from interstate hotspots' or contact ACT Health via the COVID-19 Helpline on (02) 6207 7244. | நீங்கள் எப்போது எங்கு பயணம் செய்தீர்கள் என்பதைப் பொறுத்து, நீங்கள் *ACT Health* அதிகாரிகளிடம் அறிக்கையிடுமாறு கோரப்படலாம் என்பதுடன் *ACT*-க்கு திரும்பியதும் *14* நாட்களுக்கு தனிமைப்படுத்தலுக்கும் உள்ளாக வேண்டியிருக்கலாம்.<br><br>இது உங்களுக்குப் பொருந்துமா என்பதைக் கண்டறிய, தயவுசெய்து *www.covid19.act.gov.au* -க்குச் சென்று, *'quarantine for people returning from interstate hotspots'* என்பதைத் தேடுங்கள், அல்லது *(02) 6207 7244* இல் *COVID-19* ஹெல்ப்லைன் வழியாக *ACT Health*-ஐ தொடர்பு கொள்ளவும். |

| If I have to quarantine, where will this happen? | *நான் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக வேண்டியிருந்தால், இது எங்கே நடக்கும்?* |
|---|---|
| If you live in the ACT, you will be encouraged to quarantine at home. To quarantine at home (or other private residence), the home needs to allow for appropriate separation from other household members who are not in quarantine. Household members in quarantine would ideally have a separate bedroom, bathroom and should avoid spending time in communal spaces at the same time as other people in the home who are not in quarantine.<br><br>**If this can't be done,** you will be required to quarantine in a hotel or other approved venue. ACT Health can assist in providing details of suitable accommodation which you can book (at your own expense). ACT Health will require evidence of a valid booking if you are using hotel accommodation for quarantine purposes.<br><br>More information on quarantine is provided at www.covid-19.act.gov.au on the Quarantine page. | *நீங்கள் ACT இல் வசிப்பவர் என்றால், வீட்டிலேயே தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு ஊக்குவிக்கப்படுவீர்கள். வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகும்போது (அல்லது பிற தனியார் குடியிருப்பு), தனிமைப்படுத்தலில் இல்லாத மற்ற வீட்டு உறுப்பினர்களிடமிருந்து விலகியிருப்பதற்கு ஏதுவான இடமாக அது இருக்க வேண்டும். தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீட்டு உறுப்பினர்கள், தனி படுக்கையறை, குளியலறை ஆகியவற்றைக் கொண்டிருப்பர். மேலும் தனிமைப்படுத்தலில் இல்லாத மற்றவர்கள் வீட்டிலுள்ள பொதுவான இடங்களில் இருக்கும் நேரங்களில், அங்கிருப்பதைத் தவிர்க்க வேண்டும்.*<br><br>***இதைச் செய்ய முடியாதபட்சத்தில்*** *நீங்கள் ஒரு ஹோட்டல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற வளாகத்தில் தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு கோரப்படுவீர்கள். நீங்கள் முன்பதிவு செய்யக்கூடிய (உங்கள் சொந்த செலவில்) பொருத்தமான தங்குமிட விவரங்களை வழங்குவதில் ACT Health உதவும். தனிமைப்படுத்தப்படும் நோக்கங்களுக்காக நீங்கள் ஹோட்டலைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், முன்பதிவு செய்யப்பட்டதற்கான சரியான சான்றுகள் ACT Health-க்கு தேவைப்படும்.*<br><br>*தனிமைப்படுத்தப்படுவது பற்றிய கூடுதல் தகவல் www.covid19.act.gov.au-இல் தனிமைப்படுத்தப்படல் பக்கத்தில் கிடைக்கிறது.* |